**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல: 11/2020ன் படி மாற்றீட்டு பரீட்சையை மேற்கொள்வதற்கான விதிமுறைகள் / இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்**

1. அனைத்து பரீட்சை செயற்பாடுகளும் குறித்த துறைத் தலைவர்களினால் நிர்வகிக்கப்படும்.

2. VLE ஊடாக அனைத்து மாணவர்களும் தங்களது பரீட்சை விண்ணப்படிவத்தையும் (exam entry form) நுழைவுச்சீட்டையும் (admission card) தரயிறக்கம் (download) செய்து கொள்ள முடியும்.

3. அனைத்து பரீட்சார்த்திகளும் வினாத்தாள்களை E-mail மற்றும் VLE மூலம் நேரசூசியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் (கீழுள்ள அட்டவணையை பார்க்க) காலை 9.00 மணிக்கு பெற்றுக்கொள்வர். மாணவர்கள் தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்கான வினாத்தாள்களை கட்டாயமாக தரயிறக்கம் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் அவர்களின் பாடங்களுக்கான பரீட்சையை பூர்த்திசெய்வதற்காக இருவாரங்கள் வழங்கப்படும்.

4. தொழிநுட்ப அல்லது நடைமுறை பிரச்சினைகளினால் வினாத்தாள்களை பெற்றுக்கொள்ள யாரேனும் தவறும் பட்சத்தில், பாட பொறுப்பு விரிவுரையாளர் அவற்றை சாத்தியமான வேறு முறையினூடாக வழங்குவார்.

5. இந்த பரீட்சை ‘‘திறந்த நூல் பரீட்சை’’ என்பதால் பாடவேளைகளில் வழங்கப்பட்ட கையேடுகள், சுய குறிப்புகள், பாடநூல்கள், பாடத்தோடு தொடர்புடைய ஏதேனும் குறிப்புகள் போன்றவற்றை பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

6. வினாத்தாள் நான்கு கட்டாய வினாக்களை கொண்டிருக்கும். A4 அளவான வெள்ளைத்தாளில் (whitesheet) இரு பக்கமும் கையால் எழுதப்பட்ட விடைகளை (handwritten answers) மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

7. VLE இல் காணப்படும் விடைப் புத்தகத்தின் (answer scripts) முன் பக்கத்தை அனைத்து மாணவர்களும் பூர்த்தி செய்ய வேண்டும். விடைப் புத்தகத்தில் சேர்க்கும் ஒவ்வொரு மேலதிக பக்கத்தினதும் இடது மேல் மூலையில் சுட்டிலக்கம் (Index number), பாடக் குறியீடு (subject code) ஐ எழுத வேண்டும். **ஒவ்வொரு வினாத்தாளிலும் இணைக்கப்படக் கூடிய அதிகளவான பக்கங்கள் 30 ஆகும்.**

8. அனைத்துப் பாடங்களுக்குமான பரீட்சையை முழுமைப்படுத்துவதற்காக மாணவர்களுக்கு இரு வாரங்கள் வழங்கப்படும். பூர்த்திசெய்யப்பட்ட விடைத்தாள்கள் (answer scripts/papers) மற்றும் கையொப்பமிடப்பட்ட நுழைவுச்சீட்டு (admission card) ஆகியன பதிவுத் தபாலில் (அனுப்ப வேண்டிய முகவரியை கீழே காண்க) குறித்த துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். **எக்காரணம் கொண்டும் கால நீடிப்பு** (Extensions) **வழங்கப்பட மாட்டாது.** காலந்தாழ்த்திப் பெறப்படும் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திற்குமான விடைத்தாள்களை வெவ்வேறாக இணைத்து, இடது மேல் மூலையில் பதிவிலக்கம், சுட்டிலக்கம் குறிப்பிடப்பட்ட ஒரு கடித உறையில் (single envelop) இட்டு அனுப்ப வேண்டும்.

9. விடைத்தாள்களை சமர்ப்பிப்பதற்கான முதற் தெரிவாக பதிவுத் தபால் காணப்படும். இது சாத்தியமற்றதாக காணப்படின், குறித்த மாணவர்களின் வேண்டுகோளின் பெயரில் மென்பிரதியாக சமர்ப்பிப்பதற்கான (soft copy submission) ஏற்பாடுகளை குறித்த துறைத்தலைவர்கள் மேற்கொள்வர்.

10. இப்பரீட்சை சுயமாகவே செய்யப்பட வேண்டும். காட்டுதல், பார்த்தெழுதுதல், இதே கல்வியாண்டிலுள்ள ஏனைய மாணவர்களுடன் அல்லது முன்னைய வருட மாணவர்களுடன் இதனைப் பற்றி கலந்துரையாடல் ஆகிய அனைத்து வித செயற்பாடுகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

11. மாணவர்கள் தங்களுக்கு தேவைப்படுகின்ற நூல்கள், இணையத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்தலாம். எனினும், இதன்போது, அவர்கள் இவற்றை துல்லியமாக மேற்கோள்காட்ட வேண்டும். இலக்கியத் திரட்டு (Plagiarism) முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

12. மாணவர்கள் தங்கள் விடைப்பத்திரங்களை ஒழுங்குமுறையாக சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தெளிவற்ற கையெழுத்து அவர்களின் புள்ளிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

13. அதிகாரபூர்வ குழுமத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுந்த காரணமொன்றிற்காக பரீட்சைக்கு தோற்ற முடியாத மாணவர்கள், குறித்த பாடத்தை எவ்வித தடைகளுமின்றி அடுத்த தடவையில் தோற்ற முடியும். (குறித்த துறைத்தலைவருக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

14. ஏதேனும் அவசர தேவைகளின் போது, குறித்த விடயத்தின் நிலைமைக்கேற்ப தீர்மானங்களை குறித்த துறைத்தலைவர்கள் மேற்கொள்வர்.

HoD/ Dep. of Islamic Studies : Dr. R.A. Sarjoon
0772633155
sarjoonra@seu.ac.lk

HoD/ Dep. of Arabic Language : Ms. M.C.S. Shathifa
0760123953
shathifa@seu.ac.lk

**மேலதிக விபரம்:**

| Scheduled Dates | |
|---|---|
| பரீட்சை விண்ணப்பப் படிவத்தை பதிவேற்றல் (Uploading Exam Entry Forms) | 12.07.2021 |
| பரீட்சை விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் (Submitting Exam Entry Forms) | 12.07.2021 – 19.08.2021 |
| வினாத்தாள்களை பதிவேற்றல் (Uploading Exam Papers) | 05.08.2021 |
| பரீட்சை வாரங்கள் (Exam Weeks) | 05.08.2021 – 18.08.2021 |
| அனுப்ப வேண்டிய திகதி (Postal Date) | 19.08.2021 |

**Postal Address:** **Head of the Department**
**Department of ………….**
**Faculty of Islamic Studies and Arabic Language**
**South Eastern University of Sri Lanka**
**University Park**
**Oluvil**
**#32360**